உ

கடவுள் துணை

# மத்யமவியாயோகம்

நியாயவாதியாகவும் இராமேசுவரம் தேவஸ்தானக்
கல்லூரி அத்தியக்ஷராகவும் இருந்த

ப்ரும்மஸ்ரீ

**V. S. ராமஸ்வாமிசாஸ்திரி B.A., B.L.,**

அவர்களால்

3186

வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பெற்றது.

செந்தமிழ்ப் பிரசுரம்—௬௫

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை.

1937

விலை அணா 2

# முகவுரை.

செந்தமிழ்நேயர்களே! உலகப்பிரசித்திபெற்றவராயும், வெகு காலத்துக்குமுன் விளங்கியவராயுமுள்ள பாஸகவியால் இயற்றப் பெற்ற மத்யமவியாயோகம் என்ற ஒரு சிறு ஊரூபூ (திருசிய) காவ்யத்தைத் தங்களுடைய கைம்மலர்களில் அன்புடன் சமர்ப் பணம்செய்கிறேன். தாங்கள் இதைக் கருணையுடன் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

பாஸகவி, கவிச்சக்ரவர்த்தி காளிதாஸருக்கு வெகு காலத்துக்குமுன் இருந்தவரும் அவரால் நன்கு பாராட்டப்பெற்ற வருமாவர். காளிதாஸர் தம்முடைய "மாளவிகாக்நிமித்ரம்" என்ற நாடகத்தின் முன்னுரையில், "உயர்ந்த புகழ்வாய்ந்தவர்களான பாஸர் ஸௌமில்லர் கவிபுத்ரர்: இவர்களின் கிரந்தங்களை விட்டுவிட்டுத் தற்காலத்துக்கவியான காளிதாஸன்செய்யுட் களில் ஏன் அபிமானம்வைக்கப்பெற்றது" என்று கூறியிருக்கிறார். மேலும் காளிதாஸர், தம்முடைய நாடகங்களில் பல இடங்களில் பாஸகவியின் நடையைத் தழுவியிருப்பதாகத் தெரிகிறது. பாஸ கவியின் நடை மிகத் தெள்ளிது; சுவைமிகுந்தது. அவரால் உப யோகிக்கப்பெற்ற உவமைகள் மிகச் சிறந்தவை.

இதுவரை, அவரால் இயற்றப்பெற்ற ஊரூபூ (திருசிய)காவியங் கள் பதின்மூன்று, திருவநந்தபுரம் ஸம்ஸ்கிருதவரிசையில் அச்சி யற்றப்பெற்று வெளிவந்துள்ளன. 'பாஸர் என்று ஒருகவி இருந்ததேயில்லை. அநேகர்கள் கூடி இவற்றை இயற்றியிருக்கக் கூடும்' என்று பலவிதமான ஆக்ஷேபங்கள் உண்டாயின. அவற்றுக் குத் திருவநந்தபுரம், Sanscrit curator, ப்ரும்மஸ்ரீ, மகாமகோபாத் யாய, கணபதிசாஸ்திரியாரவர்கள் தகுந்த சமாதானம் கூறியிருக் கிறார்கள். பாஸகவியென்று ஒருவர் இருந்து, அவராலே இக் காவ்யங்கள் இயற்றப்பெற்றன என்பதை, ஆங்கிலதேயத்திலும்

அமெரிக்காநாட்டிலும் உள்ள ஸம்ஸ்கிருதபண்டிதர்கள் ஆக்ஷேப சமாதானங்களைப் பரிசீலனைசெய்து, ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

வடமொழியில் 𑌶𑍍𑌰𑌾𑌵𑍍𑌯 (சிராவ்ய) காவ்யம் அதாவது காதுகளால் கேட்டு ஆநந்திக்கத்தக்க காவ்யம், 𑌦𑍃𑌶𑍍𑌯 (திருசிய) காவ்யம், அதாவது கண்களாற்கண்டு களிக்கத்தக்க காவ்யம் என்று காவ்யங்கள் இருவகைப்படும்.

𑌶𑍍𑌰𑌾𑌵𑍍𑌯 (சிராவ்ய) காவ்யங்களில், 𑌖𑌣𑍍𑌡 (கண்ட) காவ்யம் என்றும், 𑌲𑌘𑍁 (லகு) காவ்யம் என்றும், மஹாகாவ்யம் என்றும், 𑌚𑌮𑍍𑌪𑍂 (சம்பூ) என்றும் பலவகை உண்டு.

𑌦𑍃𑌶𑍍𑌯 (திருசிய) காவ்யங்களில் ரூபகம் என்று பத்துவகையும், உபரூபகம் என்று வேறு பத்துவகையும் உண்டு.

ரூபகங்களில் முக்கியமானவை நாடகம் பிரகரணம் என்பனவே. அவற்றுள்ளும் நாடகங்களே அதிகமாகக் காணப்பெறும். அவற்றில் காளிதாஸரால் இயற்றப்பெற்ற சாகுந்தளம் முதலிய மூன்றுநாடகங்களும், பவபூதி இயற்றிய உத்தரராமசரிதமும் பெயர்பெற்றவை.

பிரகரணவகையில் சூத்திரககவி இயற்றிய மிருச்சகடிகையும், பவபூதி இயற்றிய மாலதீமாதவமுமே முக்கியமானவை.

தசரூபகங்களில் இன்ன இன்ன ரூபகங்களுக்கு இன்னாரின்னார் நாயகர் என்றும், அவற்றுள் இன்னஇன்ன ரஸங்கள் அமைந்திருக்கவேண்டுமென்றும் விதிகளுண்டு. மேலும் பல வேறுவகையான கோட்பாடுகளும் உண்டு. விரிவஞ்சி அவற்றை இம்முகவுரையில் விவரிக்கவில்லை.

இப்பொழுது மொழிபெயர்க்கப்பெற்ற திருசியகாவ்யம் 'வியாயோகம்' என்பது.

அதன் இலக்கணம் சுருக்கமாக எடுத்து உரைக்கப்படும். இதில் வர்ணிக்கப்பெறும் நிகழ்ச்சி பிரசித்தமானதோர் கதை

யைத்தழுவியதாய் இருக்கவேண்டும்; அதில் தோன்றுகிற பாத்திரங்கள் (Dramatic Personae) மிகவும் கெம்பீரமானவர்களும் தைரியம் வாய்ந்தவர்களுமாயிருக்கவேண்டும். "ழஜ-லஸஂயி" (கருப்பசந்தி) "விஶேஷ-லஸஂயி" (விமரிசஸந்தி) என்பவை அதில் இல்லை. டிமம் என்ற காவ்யத்தைப்போல் அதில் உயர்ந்ததான ரஸம் (—காவ்யச்சுவை) அமைந்திருக்கவேண்டும். பெண்பாலின் காரணமாக அதில் சண்டை நிகழக்கூடாது. பரசுராமனுக்கும் தசரதராமனுக்கும், ஜனகராஜன் வில்லைமுறித்ததற்காகப் போர் ஏற்பட்டதுபோல் வேறுகாரணமாகப் போர் நிகழவேண்டும். அது ஒரேபகலில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் குறித்ததாகவும், ஒரே அங்கம் (Act) உள்ளதாகவும், அதிற்காணும் பலநிகழ்ச்சிகளும் பல பாத்திரங்களால் நிகழ்த்தப்பெற்றனவாகவும் இருக்கவேண்டும்.

இவ்விலக்கணங்களெல்லாம் இச் சிறுகாவ்யத்தில் அமைந்திருக்கின்றனவென்பது, இதை முழுதும் படித்துப்பார்த்தபின் தெரியவரும்.

செந்தமிழ்நேயர்களுக்கு இது உவந்ததாக இருக்குமானல், பாஸகவியின் வேறு காவ்யங்களையும் எனக்குத் தெரிந்தமட்டில் மொழிபெயர்த்துச் செந்தமிழ் வாயிலாக வெளியிடுவேனென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

V. S. ராமஸ்வாமிசாஸ்த்ரி.

ஸ்ரீ:

# மத்யம வியாயோகம்.

## ஸ்தாபனம்.

(நாந்தியினிறுதியில் ஸூத்திரதாரன் அரங்கத்தில் நுழைகிறான்)

ஸூத்திரதாரன்:—

வாயாகுஸவொZஸுரவய ஹிஹ்ருஷயாவஸாஷ:
வாஷொஹரெ: கூவஞயாஜேவஹ நீயஃ।
யஃ வொ்ருாஷ்ரு தஷூ்ருஹுவ நகூ்ருஜெணெ ரராஜ
வெஷஹியிஸ்ங்கூ்ருஜ ஐவாஂபாரஸாமரஸ்ரு ॥

திருமாலினது எந்தத்திருவடியானது, திரிவிக்கிரமாவதாரத்தில், மூன்றுலகங்களையும் அளக்குங்கால், மேலுலகத்தையளப்பதற்காக உயரத் தூக்கப்பெற்று, ஆகாயமாகிய ஸாகரத்தில் வைடூரியமணிகளால் ஆக்கப்பட்ட கோட்டையைப்போல் விளங்கியதோ, அஸுரமாதர்மனத்தில் துன்பம்விளைப்பதாயும், நீலோற்பலம்போல் தெளிவானதாயும், கத்திபோல் கறுத்ததாயுமுள்ள அந்தத் திருவடியானது (நம்மைக்) காப்பதாக.

இவ்விதமாக இங்குக் குழுமியிருக்கும் பெரியோர்களிடம் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடே! நான் விண்ணப்பம்செய்துகொள்ளச் சித்தமாயிருக்கும்போது, ஏதோ அரவம் கேட்கப்படுகிறதே! ஓ! பார்க்கிறேன்.

(திரைக்குள்) ஓ! அப்பா! இவன் யார்?

ஸூத்திரதாரன்:—இருக்கட்டும், தெரிந்தது.

ஹொ: ஶஊெவாவுராணாஷஸ்ரு
ஜ்ருாஹ்ஷணொZயஂ நஸஂஶயஃ।
தூ்ராஸ்ருதெ நிவிஸ்ஶஂகெந
கெநவிகு வாவவெதஸா ॥

இவர் "ஹொ(போ)" என்று அலறினதால் அந்தணரேயாவர்; அதில் ஐயமில்லை; கொடியமனம்படைத்த ஒருவனால் பயமுறுத்தப்படுகிறார்.

*

(திரைக்குள்) ஓ! அப்பா! இவன் யார்?

ஸூத்திரதாரன்:—ஓ! நன்ருய்த்தெரிந்தது; இவன் பாண்டவர் களில் நடுவனின் புதல்வனுய் ஹிடிம்பையென்ற அரணியில் தோன்றிய அரக்கத்தீயேயாவன்; தீங்கொன்றும் விளைக்காத அந்தணரொருவரைப் பயமுறுத்துகிருன். ஐயோ! மனைவிமக்க ளுடன்கூடின அந்த அந்தணன்நிலைமை மிகவும்பரிதாபகரமானது. இங்கேயோவென்ருல்:—

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

(இவர்) களைப்படைந்தவர்களான தன் இளங்குமரர்களால் சூழப்பட்டவரும் மனைவியுடன்கூடியவரும் ஓர் அரக்கனைப் பின் தொடருகிறவருமான கிழவர், புலியைத் தொடர்ந்துசெல்லுகிற தும் பசுவுடன்கூடியதும் நடுநடுங்கியகன்றுகளுடன்சேர்ந்ததுமான எருதுபோல் வருத்தமடைகிருர்.

(ஸூத்திரதாரன் வெளியேசெல்லுகின்ருன்)

ஸ்தாபனம் முற்றிற்று.

---

(பிறகு மூன்றுபுதல்வர்களுடனும் மனைவியுடனும் கூடிய கேசவதாசர் என்ற அந்தணரும் அவர்களுக்குப் பிறகு கடோத்கசனும் வருகிருர்கள்)

பெரியோர்:—ஓ! இவன் யார்?

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

நடுப்பகற்பரிதியின் கதிர்கள்போற் சிதறியிருக்கும் தலை மயிருடனும், வளைந்த புருவங்களின் ஒளியால் பொன்னிறமானவை

யாய் நீண்ட கண்களுடனும், கழுத்தில் பொன்மாலையணிந்து கொண்டு மின்னலுடன்கூடிய மேகம்போல்பவனுய்ப் பிரளய காலத்துருத்திரமூர்த்தியைப்போல் தோன்றுகிருனே!

புதல்வருள் முதலாமவன்:—ஓ! அப்பா! இவன் யார்?

க்ரஹயுகலநிபாக்ஷ: பீநவிஸ்தீர்ணவக்ஷா:
கநககபிலகேஶ: பீதகௌஶேயவாஸா: ।
திமிரநிவஹவர்ண: பாண்டுரோத்வ்ருத்ததம்ஷ்ட்ரோ
நவஜல இவ மேகோ பாதி ஸந்த்யாநுரக்த: ॥

வான்கோள்கள்போன்ற கண்களுடனும், பெருத்து விசாலமான மார்புடனும், பொன்போல் பழுப்புநிறமுள்ள மயிருடனும், மஞ்சள் நிறமுள்ள பட்டுவஸ்திரத்துடனும் விளங்கிக்கொண்டு, இருளின் தொகுதிபோன்ற நிறத்துடனும், வெளுத்த கடைப்பற்களுடனும், சந்திரகலைமறைந்த நீருண்டமேகம்போல் தோன்றுகிருனே!

இரண்டாமவன்:— ஓ! இவன் யாவன்?

கலபதஶநதம்ஷ்ட்ரோ கோணயா காரநாஸ:
கரிவரகரபாஹுர் நீலஜீமூதவர்ண: ।
ஹுதஹுதவஹதீப்த்யா ய: ஸ்திதோ பாதி பீம:
த்ரிபுரவதநிமித்தம் ஶங்கரஸ்யேவ ரோஷ: ॥

யானைக்குட்டியின் கொம்புகள்போன்ற கடைப்பற்களுடனும், கலப்பைபோல் வளைந்த மூக்குடனும், யானைத்துதிக்கைபோன்ற கைகளுடனும், கருமேகம்போலும்நிறத்துடனும், மூட்டப்பட்ட நெருப்பைப்போன்ற ஒளியுடனும், மிகவும் பயங்கரமான தோற்றத்துடனும் முப்புரமெரித்த பரமசிவனுடைய சினம்போலக் காணப் படுகிருனே!

மூன்றுமவன்:—ஓ! அப்பா! இவன் யார்? நமக்குத் துன்பம் விளைக்கிருனே!

வஜ்ரபாதோऽசலேந்த்ராணாம்
ஶ்யேந: ஸர்வபதத்ரிணாம் ।
ம்ருகேந்த்ரோ ம்ருகஸங்காநாம்
ம்ருத்யு: புருஷவிக்ரஹ: ॥

பெரியமலைகளுக்கு வச்சிராயுதம் விழுந்ததுபோலவும், பறவைக் கூட்டங்களுக்குக் கழுகுபோலவும், மான்கூட்டங்களுக்குச் சிங்கம் போலவும், யமனே மனித உருவமெடுத்து வந்ததுபோலவும் தோன்றுகிறனே!

பார்ப்பனி:—இவன் யார்? நம்மைத் துன்புறுத்துகிறனே!

கடோற்கசன்:—ஓ! பிராமணரே! நின்மின் நின்மின்.

கிம் யாஸி பயவிநாஶிததைர்யஸாரோ
வித்ரஸ்ததாரஸுதரக்ஷணஹீநஶக்தே ।
தார்க்ஷ்யாக்ரபக்ஷபவநோத்த்ருதரோஷவஹ்நி-
-தீப்த: க்ஷுத்ரஸஹிதோ புஜகோ யதா த்வம் ॥

அச்சமடைந்த மனைவிமக்களைக் காக்க வலியற்றவனே! என்னைக்கண்டு பயத்தினல் ஊக்கமிழந்தவனே! என் செல்லுகிறய்? கெருடனுடைய நுனிச்சிறகினல் வீசப்பட்டு மிகவும் சினமடைந்து சீறுகிறதாயும், பயந்த பெண்ணரவுடன் கூடினதாயுமுள்ள பாம்பைப்போல் பயந்து ஓடுகிறயே.

ஓ! அந்தணரே! போகக்கூடாது, போகக்கூடாது.

பெரியார்:—பிராம்மணி! அஞ்சேல். மக்காள்! பயப்பட வேண்டாம். இவன்வசனம் நன்று தீது என்பவற்றைப் பரிசீலனஞ் செய்வதுபோல் தோன்றுகிறது.

கடோற்கசன்:—ஐயோ! கஷ்டம். இவ்வுலகில் எங்கும் எப்பொழுதும் அந்தணர்கள் தொழத்தக்கவர்களேயென்று நான் அறிவேன். செய்யத்தகாதகார்யத்தை நான் என் அன்னையின் ஆணையால் முன்பின்யோசியாமற் செய்யநேர்ந்ததே. ஐயோ!

பெரியார்:— (மனைவியைநோக்கி) 'அரக்கர்கள்வாசம்செய்யும் கானகம் இது; ஆகையால் ஜாக்கிரதையாக இங்கே செல்லவேண்டும்' என்று தொழத்தகுந்தவரும் சீரவஸ்திரத்துடன் இருந்தவருமான ஒரு முனிவரால் இயம்பப்பெற்றது உன்நினைவுக்கு வரவில்லையா? மக்காள்! எனக்கு அச்சமே மேலிடுகிறது.

பார்ப்பனி:—இவன் க்ஷத்திரியனைப்போல் காணப்படுகிறானே!

பெரியார்:—பாக்கியமற்ற நான் என்செய்வேன்.

பார்ப்பனி:—சத்தமிடுவோம்.

புதல்வருள் முதலாமவன்:—அம்மா! நாம் எவரைக் கூப்பிடுவோம்?

𑌇𑌦𑌂 𑌹𑌿 𑌰𑍌𑌦𑍍𑌰𑌂 𑌤𑌿𑌮𑌿𑌰𑍋𑌤𑍍𑌕𑌟𑌾𑌕𑍃𑌤𑌿
𑌨𑌿𑌰𑍂𑌢𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌰𑌵𑌾𑌸𑌦𑌿𑌕𑍍𑌪𑌥𑌮𑍍 ।
𑌪𑌤𑌙𑍍𑌗𑍈𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌸𑍋𑌕𑌸𑍍𑌥𑌾𑌨𑌂
𑌵𑌨𑌂 𑌨𑌿𑌵𑌾𑌸𑌾𑌰𑍍𑌹𑌤𑌮𑌂 𑌵𑌨𑍌𑌕𑌸𑌾𑌮𑍍 ॥

இருள்மிகுதியால் இக்கானகம் மக்கள்வழக்கற்றது; பலவகையான விருக்ஷவரிசைகளால் திசை இன்னதென்றுகூடத் தெரியாமல் மறைபட்டிருக்கிறது; அன்றியும், இது பசுபக்ஷிகளால் நிறைந்தது; மகாமுனிவர்கள் தவம்செய்யத்தகுந்தது.

பெரியார்:—பார்ப்பனி! அஞ்சவேண்டாம். முனிவர்கள் இருக்கத்தக்க இடமென்பதைக் கேட்டு எனது அச்சம் நீங்கிவிட்டதுபோலும். இங்கே அருகில் பாண்டவர்களின் ஆச்சிரமம் இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன்.

𑌯𑌜𑍍𑌞𑌿𑌯𑌾𑌶𑍍𑌚 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌵𑌤𑍍𑌸𑌲𑌾𑌶𑍍𑌚
𑌦𑍀𑌨𑍇𑌷𑍁 𑌪𑌕𑍍𑌷𑌪𑌤𑌿𑌤𑌾𑌃 𑌕𑍃𑌤𑌸𑌾𑌹𑌸𑌾𑌶𑍍𑌚 ।
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌯𑌾𑌕𑍃𑌤𑌿𑌵𑍇𑌷𑌿𑌤𑌾𑌨𑌾𑌂
𑌉𑌷𑍍𑌣𑌂 𑌯𑌥𑌾𑌯𑌤𑍍𑌰𑌿𑌹𑌯𑌾𑌰𑌯𑌿𑌤𑍁𑌂 𑌸𑌭𑍇𑌦𑌾𑌃 ॥

பாண்டவர்களோவெனில், அமர்செய்ய விருப்பமுள்ளவர்கள்; சரணமடைந்தவர்களிடம் அன்புபாராட்டுபவர்கள்; எளியோர்களிடம் தயவுள்ளவர்கள்; ஊக்கமுள்ளவர்கள்; இவ்விதமான (அரக்கர்போன்ற) உருவம்கொண்டு தீங்குவிளைப்பவர்களுக்குத் தக்க தண்டனைசெய்வதில் வல்லவர்கள்.

புதல்வருள் முதலாமவன்:—அங்கே பாண்டவர்கள் இப்பொழுது இல்லையென எண்ணுகிறேன்.

பெரியார்:—குழந்தாய்! நீ எவ்விதம் அறிவாய்?

முதலாமவன்:—"சதகும்பம்" என்ற ஓர் வேள்வியைக்கண்டு களிப்பதற்காக, அவர்கள் "தௌமியக" முனிவரது ஆச்சிரமம் சென்றிருக்கிறார்கள் என்று அவ்வாச்சிரமத்திலிருந்துவந்த அந்தணரிடமிருந்து நான் கேள்விப்பட்டேன்.

பெரியார்:—ஐயோ! அப்படியானால், நாம் யாவரும் மடிந்தவர்களே!

முதலாமவன்:—அப்பா! அவர்கள் எல்லோரும் அங்கே போகவில்லை, தங்கள் ஆச்சிரமத்தைக் காப்பதற்காக அவர்களில் நடுவன் இங்கே நிறுத்தப்பெற்றிருக்கிறான்.

பெரியார்:—அவன் ஒருவன் இருந்தால், பாண்டவர்கள் எல்லோரும் இங்கே இருப்பதுபோலவே!

முதலாமவன்:—அவனும் இவ்வேளையில் தேகப்பயிற்சிக்காகத் தனது ஆச்சிரமத்துக்குச் சிறிதுதூரத்தில் போயிருக்கிறானென்று கேள்விப்படுகிறேன்.

பெரியார்:—ஐயோ! ஆசையற்றவர்களாக ஆனோமே!

முதலாமவன்:—அப்பா! தாங்கள் அவ்வரக்கனைச் சமாதானப்படுத்த முயற்சிக்கவேண்டாம்.

பெரியார்:—ஒழிவடைந்து முயற்சியை விட்டுவிடக்கூடாது.

முதலாமவன்:— (கடோற்கசனைநோக்கி) ஓ! புருஷரே! எங்களுக்கு விடுதலையுண்டோ?

கடோற்கசன்:—நல்ல அறிவைக்கொண்டு விடுவித்துக் கொள்ளக்கூடும்.

பெரியார்:—நல்லறிவு எது?

கடோற்கசன்:—எனது தாயார் என்னைநோக்கிக் "குழந்தாய் என் உபவாசமுடிவில் பாரணைசெய்ய இவ்வனத்தில் ஒரு மனிதனைத் தேடிக்கொணர்வாயாக" என்று ஆணையிட்டார்கள். இப்பொழுது தாங்கள் அகப்பட்டீர்கள்.

𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾 [illegible] 𑌶𑍋𑌕 [illegible]।
𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌭𑌯𑌂 𑌪𑌰𑌿𑌜𑍍𑌞𑌾𑌯 𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑍇𑌕𑌂 𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌯 ॥

தாங்கள் ஒருமகனை என்னுடன் அனுப்பினால், மனைவியுடனும் மற்ற இருபுதல்வர்களுடனும் தப்பிப்போகலாம். ஆகையால் எவனைவிடலாம் என்று யோசனைசெய்து ஒருபுதல்வனை விட்டுவிடுவீராக.

பெரியார்:—ஓ! கேடுகெட்ட அரக்கனே!

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌵𑌾𑌨𑍍 𑌵𑍃𑌦𑍍𑌧𑌃
𑌪𑍁𑌤𑍍𑌰𑌂 𑌶𑍀𑌲𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌾𑌹𑌂
𑌕𑌥𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌮𑍍 ॥

நான் அந்தணனல்லவா? வேதமோதியவனும் வயதுசென்றவனுமான நான், நல்லொழுக்கத்துடனும் நன்னடக்கையுடனும் கூடியபுதல்வனை நரமாமிசமுண்பவனான அரக்கன்கையில்கொடுத்துவிட்டு எவ்விதம் இன்பமடைவேன்?

கடோற்கசன்:—

𑌯𑌦𑍍𑌯𑌰𑍍𑌥𑌿𑌤𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑍇𑌕𑌂 𑌨 𑌦𑌾𑌸𑍍𑌯𑌸𑌿।
𑌸𑌕𑍁𑌟𑍁𑌮𑍍𑌬𑌃 𑌕𑍍𑌷𑌣𑍇𑌨𑍈𑌵 𑌵𑌿𑌨𑌾𑌶𑌮𑍁𑌪𑌯𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 ॥

ஓ அந்தணப்பெரியாரே! நான் கேட்டுக்கொண்டும் நீர் ஒரு புதல்வனைக் கொடுக்கமறுத்தால், ஒருகணப்பொழுதில் குடும்பத்துடன் நாசமடைவீர்,

பெரியார்:—பார்ப்பனி! நான் இவ்விதம் முடிவுசெய்துவிட்டேன். செய்யவேண்டியவற்றைச் செய்ததும், முற்றித்தளர்ந்து போனதும், ஸத்கர்மங்களால் பரிசுத்தமானதுமான இந்தச் சரீரத்தை, புதல்வர்களைக் காக்கும்விருப்பினால், அரக்கனாகிய அக்கினியில் ஹோமம்செய்துவிடுகிறேன்.

பார்ப்பனி:—பெரியவரே! அவ்விதம் செய்யக்கூடாது. கணவனைத் தொழுபவளே பதிவிரதையாவாள். மக்களைப்பெற்றுப்பயனளித்த இந்தச்சரீரத்தைக் கொடுத்துத் தங்களையும் குலத்தையும் காக்கவிரும்புகிறேன்.

கடோற்கசன்:—என் அன்னையாருக்குப் பெண்பாலிடம் விருப்பமில்லை. தாங்கள் அந்த எண்ணத்தை விட்டுவிடுங்கள்.

பெரியார்:—தம்முடன் நான் வருகிறேன்.

கடோற்கசன்:—வேண்டாம். நீர் கிழவர், விலகிவிடும்.

முதலாமவன்:—அப்பா! நான் சிறிது விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன்.

பெரியார்:—புதல்வ! சொல்.

முதலாமவன்:—

𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌃 𑌪𑌿𑌤𑍃𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑍀𑌯 𑌪𑌰𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑍁𑌮𑍍 ।
𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌯 𑌕𑍁𑌲𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌶𑌕𑍍𑌤𑍋𑌽𑌹𑌂 𑌸𑌾𑌮𑍍𑌪𑍍𑌰𑌤𑌂 𑌭𑌵𑌾𑌨𑍍 ॥

என் பிராணன்களைக்கொடுத்து, தாய்தந்தையர்களின் பிராணனைக் காக்கவிரும்புகிறேன். இந்தக்குலத்தை இரட்சிப்பதற்காகத் தாங்கள் என்னை விட்டுவிடுவீர்களாக.

இரண்டாமவன்:—ஐயா! அதுசரியல்ல.

𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌕𑍁𑌲𑍇 𑌲𑍋𑌕𑍇
𑌪𑌿𑌤𑍄𑌣𑌾𑌂 𑌚 𑌸𑌦𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌹𑌮𑍇𑌵 𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿
𑌪𑌾𑌲𑌯𑌨𑍍 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌨𑌾𑌸𑍍𑌤𑍁 ॥

உலகத்தில், மூத்தபிள்ளையானவன் குலத்தில் பெரியோன்; பிதிரர்களுக்கு மிகவும் பிரியமானவன்; ஆகையால் மூத்தவனிடம் இளையவன் நடந்துகொள்ளவேண்டிய நடக்கைகளைக் கவனித்து நானே (அரக்கனுடன்) செல்வேன்.

மூன்றுமவன்:—அண்ணன்மார்களே! அது ஒழுங்கன்று.

ஜ்யேஷ்டோ ப்ராதா பித்ருஸமஃ
கதிதோ ப்ரஹ்மவாதிபிஃ ।
ததோऽஹமேவ யாஸ்யாமி
ப்ராத்ரூணாம் ப்ராணரக்ஷணாத் ॥

மூத்தவன் தந்தைக்கு ஒப்பாவான் என்று வேதமறிந்த பெரியோர்கள் சொல்லுகிறார்கள். எனக்குப் பெரியோர்களான தமையன்மார் தாய் தந்தை: இவர்களுடைய உயிரைக் காப்பதற்காக நானே போவேன்.

பெரியோர்:—எனக்கு மிகவும் அன்புள்ள மூத்தவனை விட்டு விட மனம் சம்மதிக்கவில்லை.

பார்ப்பனி:—பெரியவர் மூத்தவனை விரும்பினால் நானும் இளையவனை விரும்புகிறேன்.

இரண்டாமவன்:—தாய்தந்தையர்களால் விரும்பப்பெறாத வன் யாருக்குத்தான் பிரியமானவனாவான்?

கடோற்கசன்:—நான் விரும்புகிறேன். விரைவில் என்னுடன் வருவாயாக.

இரண்டாமவன்:—

யேந்ராஸ்மிய ஜ்ஞாத்ர ப்ராணாஃ
ஸ்வைஃ ப்ராணைஃ பரிரக்ஷிதாஃ ।
பம்யஸ்நேஹாத்யஹ தஃ
கார்யஸ்நேஹஸ்த்ய த்ருஷ்ஹஃ ॥

நான் எனது கடமையை நிறைவேற்றிய பாக்கியவான்; என் உயிரால் பெரியோர்களின் உயிர்களைக் காத்தேன். உறவினர்களிடம்வைத்த நேசத்தைக் காட்டிலும் எமனுடன் கொள்ளும் நேசம் கிடைத்தற்கரியது.

கடோற்கசன்:—ஆச்சரியம். இந்தப் பார்ப்பனச்சிறுவன் சுற்றத்தாரிடங்கொண்ட நட்பு, புகழத்தக்கதே.

இரண்டாமவன்:—(தந்தையைநோக்கி) ஓ அப்பா! தெண்டனிடுகிறேன்.

பெரியார்:—புதல்வ! வா வா.

விநிர்ஜயகுருப்ராணாநு ஸேவ்ய: ப்ராணை குருஜநவத்ஸல।
ஸுக்ருதாத்மந் ப்ராப்நுஹி ப்ரஹ்மலோகம் அவாப்யம் அஸாதுபி:॥

பெரியோரிடம் நேசங்கொண்ட குழந்தாய்! தனது உயிரைக் கொடுத்துப் பெரியோருயிரைக் காத்தவனே! நன்மைசெய்யாதவர்களால் அணுகக்கூடாத பிரமலோகத்தை நீ அடைவாயாக.

இரண்டாமவன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன். (தாயைநோக்கி) அம்மா! நான் வணங்குகிறேன்.

பார்ப்பனி:—குழந்தாய்! வெகுகாலம் வாழ்வாயாக.

இரண்டாமவன்:— அநுக்கிரகிக்கப்பெற்றேன். (மூத்தோனைநோக்கி) அண்ணா வணங்குகிறேன்.

முதலாமவன்:—குழந்தாய்! அருகே வருவாயாக;

பரிஷ்வஜஸ்வ மாம் ஸோம்ய பரிஷ்வக்த: ஸஹோதரை:।
கீர்த்யா தவ பரிஷ்வக்தா ஸவிஷ்யதி வஸுந்தரா॥

நற்குணங்கள்நிரம்பிய நீ, என்னை இறுகக் கட்டிக்கொள்வாயாக. உனது புகழால் இப்பூமியே தழுவப்பெற்றதாக ஆகும்.

இரண்டாமவன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன்.

மூன்றாமவன்:—(இரண்டாமவனைநோக்கி) அண்ணா! வணங்குகிறேன்.

இரண்டாமவன்:—நல்லது.

மூன்ருமவன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன்.

இரண்டாமவன்:— (கடோற்கசனைநோக்கி) ஓ! புருஷரே! நான் சில சொல்லுகிறேன்.

கடோற்கசன்:—விரைவில் உரைப்பாய். உரைப்பாய்.

இரண்டாமவன்:— இக்கானகத்தில் ஒரு நீர்நிலை உளதுபோல் தோன்றுகிறது. பரலோகத்தையடைபவனுன நான் தாகவிடாய் தீர்த்துக்கொள்ளுகிறேன்.

கடோற்கசன்: — பரலோகம்புகத் துணிந்த மகானே! விரைவிற் சென்று திரும்பிவருவாயாக; என் அன்னையார் உண்ணும் வேளை நெருங்கிவிட்டது. விரைவில் வருவாயாக.

இரண்டாமவன்:—ஐய! இதோ போகிறேன்.

(என்று வெளியே செல்லுதல்)

பெரியார்:—ஐயோ! ஐயோ! அரக்கனுல் மோசஞ்செய்யப் பட்டேனே! குழந்தையை இழந்தேனே!

யஷ்ரூஶ்ருஂஹொ ஜஜதூவாஸீ நூநெநாஜெஜூா வஂஶவவ-்தঃ।

ஸ மெ்யூஶ்ருஂஹஹஂமெ ந ஜநஷுவதிமெஜஹ்ருஶழ ॥

மூன்றுகொடுமுடிகளோடுகூடிய எனது பிரியமான "வம்சம்" என்ற மலையானது, இப்பொழுது நடுக்கொடுமுடி போய்விட்டதால் என் மனதை மிகவும் வாட்டுகிறதே!

என்செய்வேன்? ஓ குழந்தாய்! போய்விட்டானே.

தரப்பண தரப்பணா நரப-பிவகாஜெ

நியஜவோராயூய நவூஸக்தூபப்ஜெ।

கூயதிஹஹஜாராஜஜதஹநூ

தூரப்ரவிவ யாஸ்யூஷிவப்ஷிமெதாவிநாஶழ ॥

ஓ இளங்குமரனே! வயதுக்குத்தகுந்த அழகுவாய்ந்தவனே! முறைதவருமல் வேதமோதுதலில் ஆசைகொண்டவனே! யானையின் கொம்புகளால் முறிக்கப்பட்ட நல்லமலர்களுடன்கூடின மரம்போல் விநாசத்தை அடைகிருயே! என்செய்வேன்!

கடோற்கசன்:—பார்ப்பனச்சிறுவன் தாமதிக்கிருனே! என் அன்னையின் ஆகாரவேளை வந்துவிட்டதே! நான் என்செய்வேன்! இருக்கட்டும். கஷ்டம்! (பெரியாரைநோக்கி) பார்ப்பனரே! உம்முடைய புதல்வனை அழைப்பீராக.

பெரியார்:—சீ! அரக்கனுடைய தன்மையையும் மீறியதுபோல் இருக்கிறது உன் வசனம். (கொடிய அரக்கனும் இவ்விதம் உரைக்க மாட்டானே)

கடோற்கசன்:—ஐயா! கோபங்கொள்ளவேண்டாம். தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும். இது என் சுபாவதோஷம். நும் புதல்வன்பெயர் என்ன?

பெரியார்:—இதைக்கேட்கவும் என்மனம் பொறுக்கவில்லையே!

கடோற்கசன்:—சரி. (மூத்தகுமாரனைநோக்கி) பார்ப்பனக்குமரனே! உன் தம்பியின்பெயர் யாது?

முதலாமவன்:—அந்தப் பேதையின் பெயர் நடுவன் என்பது.

கடோற்கசன்:—அவன் மூவர்களில் நடுப்பிள்ளையாதலால் "நடுவன்" என்பது பொருத்தமானதே; நானே கூப்பிடுகிறேனே. நடுவ! நடுவ! விரைவில் வருவாயாக.

(பீமசேனன் வருதல்)

பீமசேனன்:—ஓ! இந்தக்குரல் யாருடையது?

வஹஸ தவிா‌ெதவிரௌதி தாம்

ஓ்ரஶஹெ நஷ்யஜஸங்க்டெவெ நZஷிநு।

ஜ நய திவஶெ நாஜ்வாஂஷ்வரோZயம்

ஸஹாஸஷ்யெஶாஹி ய நஂஜயஷ்வாஸ்ய॥

பறவைக்கூட்டங்களின் பலமான சத்தத்தால் நிரம்பினதாயும், மரங்கள் அடர்ந்ததாயும், ஒருவரும் ஊடே செல்லக்கூடாததாயும் இருக்கிற இக்கானகத்தில் உரக்கக்கேட்கப்படுகிற இந்தச் சத்த மானது, அர்ஜுனனது குரல்போல் கெம்பீரமாயிருந்தாலும் என் மனத்தில் துன்பம்விளைக்கிறதே.

கடோற்கசன்:—பிராமணச்சிறுவன் தாமதிக்கிருனே! அன்னை யாரின் ஆகாரவேளையாகின்றதே! நான் என்ன செய்வேன்! இருக் கட்டும். கஷ்டம். உரக்கக்கூவுகிறேன். ஓ! ஓ! நடுவ! விரைவில் வா.

பீமசேனன்:—இந்த வனாந்தரத்தில், என் தேகப்பயிற்சிக்குத் தடையாக, எவனோ ஒருவன் நடுவ! நடுவ! என்று என்னைக் கூப்பிடுகிருனே. இருக்கட்டும், பார்ப்போம். (நெருங்கிவந்து பார்த்து) இந்தப் புருஷன் அழகுள்ளவனாயிருக்கிருன்.

𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑍍𑌯𑌃 𑌸𑌿𑌂𑌹𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑍋 𑌮𑌧𑍁𑌨𑌿𑌭𑌨𑌯𑌨𑌃
𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌗𑌮𑍍𑌭𑍀𑌰𑌕𑌣𑍍𑌠𑍋
𑌬𑌭𑍍𑌰𑍁𑌭𑍍𑌰𑍂𑌃 𑌶𑍍𑌯𑍇𑌨𑌨𑌾𑌸𑍋 𑌦𑍍𑌵𑌿𑌰𑌦𑌪𑌤𑌿𑌹𑌨𑍁𑌰𑍍
𑌦𑍀𑌰𑍍𑌘𑌵𑌿𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌕𑍇𑌶𑌃
𑌵𑍍𑌯𑍂𑌢𑍋𑌰𑌸𑍍𑌕𑍋 𑌵𑌜𑍍𑌰𑌮𑌧𑍍𑌯𑍋 𑌗𑌜𑌵𑍃𑌷𑌭𑌗𑌤𑌿𑌰𑍍
𑌲𑌮𑍍𑌬𑌪𑍀𑌨𑌾𑌂𑌸𑌬𑌾𑌹𑍁𑌃
𑌸𑍁𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌜𑍋 𑌵𑌿𑌪𑍁𑌲𑌬𑌲𑌯𑍁𑌤𑍋
𑌲𑍋𑌕𑌵𑍀𑌰𑌸𑍍𑌯 𑌪𑍁𑌤𑍍𑌰𑌃 ॥

இவன் சிங்கம்போன்ற முகமும் சிங்கப்பற்களுமுடையவன்; தேன்போற் சிவந்த கண்களுடையவன்; மதுரமாயும் கெம்பீரமாயு முள்ள குரல்வாய்ந்தவன்; பொன்போல் மஞ்சள்நிறமான புருவ முடையவன்; கழுகின்மூக்கைப்போல் வளைந்த மூக்குடையவன்; விசாலமான மார்புடையவன்; வச்சிராயுதம்போல் திண்ணிதான இடுப்புள்ளவன்; களிறும் ஆனேறும் போலும் நடையுடையவன்;

நீண்டு பெருத்துத் தொங்கும் கைகள் வாய்ந்தவன்; மிக்க பலமுள்ளவன்; உலகிற்சிறந்த வீரனுக்கு ஓர் அரக்கியிடம் பிறந்தவனுகவே காணப்படுகிருன்.

கடோற்கசன்:—பிராமணச்சிறுவன் தாமதிக்கிருனே! அன்னையின் ஆகாரவேளையாய்விட்டதே! நான் இனி என்செய்வேன்! இருக்கட்டும், உரக்கக்கூப்பிடுகிறேன். ஓ! ஓ! நடுவ! விரைந்து வா.

பீமசேனன்:—இதோ வந்துவிட்டேன்.

கடோற்கசன்:—இவன் பிராமணச்சிறுவனல்லன்; இந்தப் புருஷன் மிகவும் அழகுவாய்ந்தவன்;

𑌸𑌿𑌂𑌹𑌾𑌕𑍃𑌤𑌿𑌃 𑌕𑌨𑌕𑌤𑌾𑌲𑌸𑌮𑌾𑌨𑌬𑌾𑌹𑍁𑌰𑍍
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑌨𑍁𑌰𑍍𑌗𑌰𑍁𑌡𑌪𑌕𑍍𑌷𑌵𑌿𑌲𑌿𑌪𑍍𑌤𑌵𑌕𑍍𑌷𑌾𑌃 ।
𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌭𑌵𑍇𑌦𑍍𑌵𑌿𑌕𑌸𑌿𑌤𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌪𑌤𑍍𑌰𑌨𑍇𑌤𑍍𑌰𑍋
𑌨𑍇𑌤𑍍𑌰𑍇 𑌹𑌰𑌨𑍍𑌨𑌿𑌵 𑌮𑌮𑌾𑌗𑌤 𑌏𑌵 𑌬𑌨𑍍𑌧𑍁𑌃 ॥

இவன் சிங்கம்போல் பலமுள்ள தேகம்வாய்ந்தவன்; பொன்னலாகிய பனைமரம்போல் நீண்ட கைகளுடையவன்; சிறிய இடையுடையவன்; கெருடனுடைய சிறகுபோல் மேடுபள்ளமில்லாத விலாப்படைத்தவன்; மலர்ந்த தாமரையிதழ்போல் விசாலமான கண்கள் படைத்தவன்; ஒருக்கால் மகாவிஷ்ணுவோ! இங்கேவந்து என் உறவினன்போல் என் கண்களைக் கவர்கின்ருனே!

ஓ நடுவ! உன்னைத்தான் கூப்பிடுகிறேன்.

பீமசேனன்:—ஆகையால்தான், நான் வந்தேன்.

கடோற்கசன்:—தாங்களும் "நடுவரோ"?

பீமசேனன்:—நான் வேறு ஒருவனல்ல.

𑌮𑌧𑍍𑌯𑌮𑍋𑌽𑌹𑌮𑌵𑌧𑍍𑌯𑌾𑌨𑌾 𑌮𑍁𑌤𑍍𑌸𑌿𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌮𑌧𑍍𑌯𑌮𑌃 ।
𑌮𑌧𑍍𑌯𑌮𑍋𑌽𑌹𑌂 𑌕𑍍𑌷𑌿𑌤𑍌 𑌭𑌦𑍍𑌰! 𑌭𑍍𑌰𑌾𑌤𑍄𑌣𑌾𑌮𑌪𑌿 𑌮𑌧𑍍𑌯𑌮𑌃 ॥

கொல்லக்கூடாதவர்களுள் நான் நடுவன்; சௌர்ய வீர்யங்களால் கொழுத்தவர்களுள் நான் நடுவன்; ஓ அன்ப! பூமிக்கும் நான் நடுவன்; சகோதரர்களுக்குள்ளும் நான் நடுவனே.

கடோற்கசன்:—இருக்கலாம்.

பீமசேனன்:—

𑌮𑌧𑍍𑌯𑌮𑌃 𑌪𑌞𑍍𑌚𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌮𑌧𑍍𑌯𑌮𑌃।

𑌭𑌵𑍇 𑌚 𑌮𑌧𑍍𑌯𑌮𑍋 𑌲𑍋𑌕𑍇 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑍍𑌯𑍇𑌷𑍁 𑌮𑌧𑍍𑌯𑌮𑌃॥

பஞ்சபூதங்களுள் நான் நடுவன்; அரசர்களுக்குள்ளும் நான் நடுவன்; என் தாய்வயிற்றுப்பிறந்தவர்களிலும் நான் நடுவன்; உலகில் எந்தக்கார்யங்களிலும் நான் நடுநிலைமைவகித்தவன்.

பெரியார்:—

𑌮𑌧𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌤𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍇 𑌨𑍂𑌨𑌂 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌮𑌧𑍍𑌯𑌮𑌃।

𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑌦𑌰𑍍𑌪𑌾𑌦𑍁𑌦𑍍𑌭𑍂𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌸𑍍𑌮𑌾𑌕𑌮𑌾𑌗𑌤𑌃॥

"நடுவன்" என்று சொன்னதால், பாண்டவர்களுள் நடுவன் (பீமசேனன்), யமனுடைய கொழுப்பிலிருந்து தோன்றியவன் போல், நம்மை விடுவிப்பதற்காக இங்கு வந்திருக்கிறுன். அது நிச்சயம்.

(அந்தண) நடுவன்:—(திரைக்குள் நுழைந்து) பரலோகத்தில் கிடைக்காததும் தாமரையிதழ்களுடன் பிரகாசிக்கிறதுமான குளத்துநீரை ஆசமனஞ்செய்து வந்துவிட்டேன்.

(கடோற்கசனை யணுகி) ஓய்! வந்துவிட்டேன்.

கடோற்கசன்:—நீ இப்பொழுதன்றே வந்துசேர்ந்தாய்? நடுவ! நடுவ! இங்கே, இங்கே (வா)

பெரியார்:—(பீமசேனனை அணுகி) ஓ! நடுவ! பார்ப்பனக்குடும்பத்தைக் காப்பாற்றுக.

பீமசேனன்:—அஞ்சவேண்டாம்; அஞ்சவேண்டாம். நடுவனுன நான் வந்தனைசெய்கிறேன்,

பெரியார்:—வாயுவைப்போல் தீர்க்காயுளுடையவனுயிருப்பாயாக.

பீமசேனன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன். பெரியாருக்கு எதனுல் அச்சம்?

பெரியார்:—கேட்பாயாக. நான், குருராஜனுல் முன் ஆளப்பட்ட 'குருஜாங்கல'மென்ற நாட்டில் 'யூப'க்கிராமத்தில் வசிப்பவனும், "மாடர" கோத்திரத்துப் பிறந்தவனும், கல்பசாகையை அத்தியயனஞ்செய்து வேள்வியைச் செய்விக்கத்தகுந்தவனுமான கேசவதாஸனெனப்பெயர்வாய்ந்த ஓர் அந்தணன். எனக்கு வடதேயத்தில் 'உத்யாமகம்' என்ற கிராமத்தில் வசிப்பவரும் கௌசிககோத்திரத்தில் பிறந்து "யஜ்ஞபந்து" வெனப் பெயர்பெற்றவருமான தாய்மாமன் இருக்கிறுர். அவருடைய புதல்வன் உபநயநத்தைக் கண்டு களிக்க, மனைவியுடன் புறப்பட்டேன்.

பீமசேனன்:— தங்களுக்கு வழியில் இடையூறில்லாமலிருக்கட்டும். மேலே சொல்வீராக.

பெரியார்:—பிறகு இவன் என்னை,

ஸஜலஜலதகா₃த்ர: பங்கஜாயதாக்ஷோ
    ஹரிவரகதிமதிர்வோ ராக்ஷஸ: கோ₄ரதம்ஷ்ட்ர:।
ஜகதி விக₃தஶங்க: ஸ்வீயாநாம் ஸமக்ஷம்
    ஸபரிஜநம் ஹா! ஹந்துகாமோ'ப்₄யுபைதி॥

நீருண்டமேகம்போன்ற தேகம்வாய்ந்தவனும், தாமரையிதழ்போல் நீண்ட கண்களுடையவனும், சிங்கம்போல் கெம்பீரமான நடையுள்ளவனும், நீண்ட கோரைப்பற்கள் வாய்ந்தவனுமான ஓர் அரக்கன், உலகத்தில் அச்சமற்றவனுக நம்போல்பவர்முன்னிலையிலே, மக்கள் பரிஜனங்களுடன்கூடிய என்னை ஐயோ! கொல்லவெண்ணி நெருங்கிவருகிறுனே!

பீமசேனன்:—இப்படியா? இவனுல் அந்தணருக்கு வழியில் தடை ஏற்பட்டது. இருக்கட்டும்; இவனைப் பிடித்துவிடுகிறேன். ஓ! புருஷனே! நில் நில்.

கடோற்கசன்:—இதோ நின்றுவிட்டேன்.

பீமசேனன்:—ஏன் அந்தணரைத் துன்புறுத்துகிறாய் ?

வ௱த்ருநக்ஷத்ருகீண–ஸ்ய வதீகாஜவ்ருஜஸ்ய ।

வ்ருஜஸ்யவிவ்ருவஹ்ரஸ்ய ஜவாநுரா௱ஹ௱ரிவா கதஃ ॥

புதல்வர்களான நக்ஷத்திரங்களால் சூழப்பெற்றவரும், மனைவியாகிய நிலவுவெளிச்சத்துடன் கூடினவரும், வயதுமுதிர்ந்தவருமான அந்தணராகிய சந்திரனைப் பிடிக்க, ராகுபோல் வந்தனையே !

கடோற்கசன்:—ஆம், ராகுதான்.

பீமசேனன்:—ஆ !

நிவ்ருத்தவ்யவஹாரொயம் வஃா௱ தநயெயஸஹ ।

ஸவ–ாவராயெZவய்வ்ஹா தா ஜூ௱வ்ரு தாஂஹிஜஸத்ஃஃ ॥

வலிமையையிழந்து தன்கார்யங்களைக் கவனிக்கச்சக்தியற்றவரும் எவ்விதக்குற்றஞ்செய்யினும் வதைக்கத்தகாதவருமான அந்தணப்பெரியாரை மனைவி மக்களுடன் விட்டுவிடுவாயாக.

கடோற்கசன்:—விடமாட்டேன்.

பீமசேனன்:—(தனக்குள்) ஓ! இவன் யாருடையபுதல்வனு யிருக்கக்கூடும்.

ஜூாதூணாஂ ஜஸவெ–ஷாஂ கொயஂஹொ ஹ௱ண தஸ்ஃ ।

ஊரு‍ஜெஷ்வஜூாவமௌணீய–ஂ ஷௌஜ‍ூஸ்யஷா௱ஜூஹழ ॥

என்சகோதரர்களனைவருடைய குணங்களையும் களவுசெய்தவனான இவன் யார் ? இச்சிறுவனுடைய சாமர்த்தியத்தை நோக்குமிடத்துச் சுபத்திரையின்புதல்வனான அபிமன்யுவின் நினைவு எனக்கு வருகிறது !

(வெளிப்படையாக) ஓ ! புருஷ ! விட்டுவிடு.

கடோற்கசன்:—விடமாட்டேன்.

𑌉𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑌾𑌤𑍇𑌤𑌿 𑌵𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑌂 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 𑌯𑌦𑌿𑌸𑍇𑌵𑌿𑌤𑌾।

𑌨 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌤𑌥𑌾𑌪𑍍𑌯𑍇𑌷 𑌗𑍃𑌹𑍀𑌤𑍋 𑌮𑌾𑌤𑍁𑌰𑌾𑌜𑍍𑌞𑌯𑌾॥

என் தகப்பன் அன்புடன் என்னிடம் "நீ விட்டுவிடு" என்று சொன்னாலும், என் அன்னையின் ஆணையால் பிடிக்கப்பட்ட இவரை நான் விடமாட்டேன்.

பீமசேனன்:—(தனக்குள்) தாயின் உத்திரவு எப்படி? ஆ! பெரியோர்பணிசெய்வதில் ஆசையுள்ள தார்மிகன் இவன்.

𑌮𑌾𑌤𑌾 𑌕𑌿𑌲 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌦𑍈𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌦𑍈𑌵𑌤𑌂।

𑌮𑌾𑌤𑍁𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌪𑍁𑌰𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌵𑌯𑌮𑍇𑌤𑌾𑌂 𑌦𑌶𑌾𑌂 𑌗𑌤𑌾𑌃॥

மனிதர்களுக்குத் தாயே தெய்வங்களுக்குள்தெய்வம் (அன்னையைக்காட்டிலும் மேலானதெய்வம் இல்லை). நாங்கள் எங்கள் தாயின் ஆணையால் இவ்விதமான நிலைமையை அடைந்திருக்கிறோம். (வெளிப்படையாய்) ஓ! புருஷ! உன்னைக்கேட்கவேண்டிய சில உண்டு.

கடோற்கசன்:—விரைந்து சொல்லுவீர்களாக.

பீமசேனன்:—உன் தாயின்பெயர் என்னவோ!

கடோற்கசன்:—கேட்கலாம். ஹிடிம்பையென்ற ராக்ஷஸி.

𑌕𑍌𑌰𑌵𑍍𑌯𑌕𑍁𑌲𑌜𑍀𑌵𑍇𑌨 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑍇𑌨 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾।

𑌸𑌨𑌾𑌥𑌾 𑌸𑌾 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌾 𑌪𑍂𑌰𑍍𑌣𑍇𑌨𑍍𑌦𑍁𑌨𑌾 𑌦𑍍𑌯𑍌𑌰𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾॥

பூரணசந்திரனைத் தலைவனாகப்பெற்று ஆகாயம் விளங்குவது போல்,பாக்கியவதியான அந்த அம்மாள், குருகுலத்துக்கு விளக்குப் போன்றவரும் பாண்டுவின் புதல்வருமான மகாத்மாவை நாயகனாகப்பெற்று விளங்குகிறாள்.

பீமசேனன்:—(தனக்குள்) ஆ! ஹிடிம்பையின் புதல்வனா இவன்? அவனுக்கு இவ்வளவுகர்வம் தகுதியானதே!

𑌰𑍂𑌪𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌬𑌲𑌂 𑌚𑍈𑌵 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌹𑌿 𑌸𑌦𑍃𑌶𑌂 𑌬𑌹𑍁।

𑌪𑍂𑌜𑌾𑌸𑍍𑌵𑍀𑌕𑌾𑌰𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌂 𑌮𑌨𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑌿𑌶𑍍𑌯𑌤𑍇॥

இவன், யுதிஷ்டிரர் முதலியவர்களைப்போல் உருவம் தைரியம் தேகவலிமை என்னும் இவைகளையுடையவனே; ஆனால், ஜனங்களிடம் இரக்கமில்லாத இவன் மனம்மட்டும் அவர்கள் மனம்போல் இருக்கவில்லையே! (வெளிப்படையாய்) ஓ! புருஷ! அவர்களை விட்டுவிடு.

கடோற்கசன்:—விடமுடியாது.

பீமசேனன்:—ஓ! அந்தணரே! உம்முடைய புதல்வனைக் கூட்டிக்கொண்டுபோகலாம். நாம் இவனைத் தொடர்ந்துசெல்வோம்.

நடுவன்:—தாங்கள் அவ்வாறு செய்யக்கூடாது.

𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌗𑍇𑌵 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌃
𑌗𑍁𑌰𑍁𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌷𑍍𑌵𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾 ।
𑌯𑍁𑌵𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌗𑍁𑌣𑌵𑌾𑌨𑍇𑌵 𑌤𑌤𑍍
𑌭𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍁 𑌭𑍂𑌤𑌯𑍇 ॥

பெரியோர்களின் உயிரைக் காப்பதற்காக என் உயிரை முன்னமே நான் விட்டுவிட்டேன்; யுவபுருஷராயும் நற்குணங்கள் வாய்ந்தவராயுமுள்ள நீர் பூமியில் வெகுகாலம் வாழ்ந்திருக்க வேண்டும்.

பீமசேனன்:—ஐயா! அது ஒழுங்கன்று. நான் அரசர்குலத்தில் பிறந்தவன். பிராமணர்கள் மிகவும் பூஜிக்கத்தகுந்தவர்களல்லரா? ஆதலால் என்சரீரத்தால் பிராமணசரீரத்தை மாற்றிக் கொள்ளவிரும்புகிறேன்.

கடோற்கசன்:—சரி: இவர் க்ஷத்திரியரா? அதனால்தான் கர்வம். இருக்கட்டும். இவரையே பிடித்துக்கொண்டுபோகிறேன். அந்தணச்சிறுவனை யார்தடுத்தது?

பீமசேனன்:—நானே.

கடோற்கசன்:—தாங்களா?

பீமசேனன்:—ஆம்.

கடோற்கசன்:—ஆதலால் தாங்களே என்னுடன் வருவீர்களாக.

பீமசேனன்:—நான் வரமாட்டேன். உனக்கு வலிமையிருந்தால் என்னை வலிந்து கொண்டுபோவாயாக.

கடோற்கசன்:—தாங்கள் என்னை யார் என்று அறிந்து கொண்டீர்களா?

பீமசேனன்:—என்புதல்வனெனத் தெரிந்துகொண்டேன்.

கடோற்கசன்:—நான் எவ்விதம் உம்முடைய புதல்வனாவேன்?

பீமசேனன்:—கோபித்துக்கொள்ளவேண்டாம். மன்னிப்பாயாக. பிரஜைகளையெல்லாம் க்ஷத்திரியர்கள் புத்திரர்களென்று கூறுவார்கள்; ஆதலால் நான் உன்னை அவ்வாறு கூறினேன்.

கடோற்கசன்:—பயந்தவர்கள் ஆயுதம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது.

பீமசேனன்:—

ஸாத்வஸேத்யபிதானம் ந ஜாநே
ஜ்ஞாதும் ததிச்சாமி பவத்ஸகாஶே।
கிம்ரூபவத் தத்த்வத: ஸத்ய! தஸ்ய
குணாகுணஜ்ஞ: ஸத்யம் ப்ரவீது॥

நல்லோனே! உண்மையாகச் சூளுறவுசெய்கிறேன். அச்சம் என்ற பொருளை நான் அறியேன். அதை உன்னிடம் அறிய விரும்புகிறேன். பயம் என்று நீ சொல்வதால், நீ அறிந்திருப்பாயென்று நினைக்கிறேன். அது எவ்விதமானது? சொல்லுவாயாக.

கடோற்கசன்:—நான் தங்களுக்கு அச்சம் இதுவென்று விளக்கிக்காட்டுகிறேன். ஆயுதத்தை யெடுத்துக்கொள்ளலாம்.

பீமசேனன்:—ஆயுதமா? அதை யெடுத்துக்கொண்டாய் விட்டது.

கடோற்கசன்:—அது எப்படி?

பீமசேனன்:—

காஞ்சநஸ்தம்பஸத்ருசோ ரிபூணாம் நிக்ரஹோத்ஸுக: ।
அயம் து தக்ஷிணோ பாஹுராயுதம் ஸத்ருசம் மம ॥

பொற்றூண்போன்றதும், பகைவர்களை அடக்குவதில் ஆசையுள்ளதுமான எனது வலக்கையே எனக்குத் தகுந்த ஆயுதம்.

கடோற்கசன்:—என்பிதாவான பீமசேனருக்குமட்டும் இது தகுந்தது.

பீமசேனன்:—பீமன் என்பவன் யார்?

விச்வகர்தா சிவ: க்ருஷ்ண: சக்ர: சக்தித்ரோ யம: ।
ஏதேஷ்வேகதமோ வத்ஸ! கேநதே ஸத்ருச: பிதா ॥

குழந்தாய்! உலகத்தைப்படைத்தவர், பரமசிவன், ஸ்ரீ கண்ணன், இந்திரன், முருகன், யமன்: இவர்களுள் உன் தந்தை யாரையொத்தவன்?

கடோற்கசன்:—எல்லாருக்கும் சமமானவர்.

பீமசேனன்:—சே! இது பொய்யே.

கடோற்கசன்:—எப்படி? எப்படி? பொய்யென்று சொல்லுகிறாய். என் அப்பனை இகழ்கின்றாய். இருக்கட்டும். இந்தப் பெரிய மரத்தைப் பிடிங்கிக்கொண்டு அடிக்கிறேன். (மரத்தைப் பிடுங்கி அடித்து) இந்த அடியினாலும் இவனைக் கொல்லமுடியவில்லையே! நான் என்செய்வேன். இருக்கட்டும், கண்டுகொண்டேன்; இந்த மலைச்சிகரத்தைப் பிடிங்கிக்கொண்டு தாக்குகிறேன்.

சைலச்ருங்கம் மயாக்ஷிப்தம் ப்ராணாநாதாய யாஸ்யதி ।

என்னால் எறியப்பெற்ற மலைச்சிகரம் உனது உயிரைக்கொண்டு போய்விடும்.

பீமசேனன்:—

ருஷ்டோ(அ)பி குஞ்ஜரோ வந்யோ
ந வ்யாக்ரம் தர்ஷயேத் க்வசித் ॥

வனத்தில் பிறந்த யானைக்குச் சினம்வந்தாலும் அது புலியைத் தாக்குமா?

கடோற்கசன்: — (அடித்து) இதனாலும் இவன் கொல்லப்படவில்லையே! நான் என்னசெய்வேன்! இருக்கட்டும், தெரிந்தது;

நந்வஹம் பீமஸேநஸ்ய புத்ர: பௌத்ரோ நபஸ்வத: ।
[illegible] நியுத்தே நாஸ்தி மே ஸம: ॥

நான் வாயுபகவானுடைய பேரனும் பீமசேனருடைய புதல்வனுமல்லனோ? ஆய்த்தமாகச் சற்று நில்லும்; முஷ்டியுத்தத்தில் எனக்குச் சமமானவன் ஒருவனும் இல்லை.

(இவ்விதமாக இருவரும் முஷ்டியுத்தம் செய்தல்.)

கடோற்கசன்:—(பீமசேனனைக் கட்டி)

[illegible]
[illegible] ।

வலிய கயிறுகளால் இறுகக்கட்டப்பட்ட யானையைப்போல் என்கைகளால் இறுகக்கட்டப்பட்ட நீ எப்படி வெளியேறுவாய்?

பீமசேனன்: —(தனக்குள்) ஹே! துர்யோதனனே! உன் எதிரிகளின்கட்சி வலுக்கிறது. அதற்குத் தகுந்த உபாயத்தைத் தேடிக்கொள்.

(வெளிப்படையாக) பிள்ளாய்! ஜாக்கிரதையாக இருப்பாயாக.

கடோற்கசன்:—ஜாக்கிரதையாக இருக்கிறேன்.

பீமசேனன்:—(கடோற்கசன்கைக்கட்டை உதறித்தள்ளி)

[illegible]
[illegible] ॥

ஹே! வீரனே! உனக்கு அதிகபலமிருக்கிறதென்ற திமிரை விட்டுவிடு; உன் வலியை நான் அறிந்துகொண்டேன். கைச் சண்டையில் எனக்கு ஒருசிரமமும் இல்லையல்லவா?

கடோற்கசன்:— இதனாலும் இவனைக் கொல்ல இயலவில்லை. நான் என்செய்வேன்? இருக்கட்டும் தெரிந்தது. என் அன்னையின் அருளால் கிடைக்கப்பெற்ற மாயமான கயிறு இருக்கிறது. அதனால் இவனைக் கட்டிக்கொண்டுபோவேன். ஓ! மலையே! ஜலம் கொணர்வாய். ஆ! ஜலம் வழிகிறது. (ஆசமனம் செய்து மந்திரத்தை ஜபித்து) ஓ! புருஷனே!

𑌮𑌾𑌯𑌾𑌪𑌾𑌶𑍇𑌨 𑌬𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌵𑌶𑍋 𑌨 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌸𑌿।
𑌰𑌜𑍍𑌜𑍁𑌭𑌿𑌰𑍍𑌬𑌦𑍍𑌧𑌃 𑌶𑌕𑍍𑌰𑌧𑍍𑌵𑌜 𑌇𑌵𑍋𑌤𑍍𑌸𑌵𑍇॥

நீ மாயக்கயிற்றினல் கட்டப்பட்டுத் தானாக நகரமுடியாமல் உத்ஸவங்களிற் கயிறுகளாற் கட்டப்பட்டதான * இந்திரத்வஜம் போல் விளங்குவாய்.

(என்று கடோற்கசன் மாயையால் பீமசேனனைக் கட்டுதல்.)

பீமசேனன்:—என்ன? மாயக்கயிற்றினல் கட்டுப்பட்டு விட்டேனே! இப்பொழுது என்னசெய்வேன்! மகேசுவரனின் பிரஸாதத்தால் கிடைத்ததும் மாயாபாசத்தை அறுக்கவல்லதுமான மந்திரம் இருக்கிறது. அதை ஜபிக்கிறேன். ஜலம் எங்கு கிடைக்கும்? இருக்கட்டும். ஓ! பிராமணகுமார! உனது கமண்டலத்திலிருக்கிற ஜலத்தைக் கொண்டுவா.

பெரியார்:—இதோ ஜலம்.

(பீமசேனன், அந்த நீரினல் ஆசமனஞ்செய்து மாயையை விலக்கிவிடுதல்.)

கடோற்கசன்:—ஓ! கயிறு விழுந்துவிட்டதே!.

நான் இனி என்னசெய்வேன்! ஓ! புருஷரே! தாங்கள் முன்பு (பிராமணச்சிறுவனுக்குப் பதிலாகத் தாங்களே வருவதாக) வாக்குறுதிசெய்ததை நினைத்துக்கொள்ளுங்கள்.

---

* மழை பொழிவதற்காக உயர்ந்ததான இந்திரத்வஜம் கட்டுவது, தொன்றுதொட்டு வழக்கம்.

பீமசேனன்:—சரியான சமயம். எனக்கு இப்பொழுது நினைவு வந்தது. முன்னே செல்லுவாயாக.

(இருவரும் செல்லுதல்.)

பேரியார்:— பிள்ளைகாள்! பீமசேனன் போகிறானே! நாம் என்செய்வோம்?

ஸுக்ருப்தாக்ஷஸிம்ஹவ்ருஷதர்ப்பிவ
உந்நேத்ரவாஹுர்ப்பலவீர்யவிநிர்ணயஸ்த்வ ।
ஹஸ்தியாதிஸநமேகாவயர்ப்பிய ஸீவ
ஜாஸாரவஷுத்ரிவமொஹாவ்ருஷலஃ ஸஹிமஃ ॥

பொலிந்து விளங்கும் உக்கிரரூபத்துடன்கூடினவனும், கைவலிமைவாய்ந்தவனுமுள்ள அரக்கனைப் பொருட்படுத்தாது, மழைபெய்யும்போது அதைப் பாராட்டாமல் தன் கொம்புகளால் விலக்கிக்கொண்டு உல்லாசமாகச்செல்லுகிற எருதைப்போல் நடக்கின்றானே!

கடோற்கசன்:—இங்கே நில்லுங்கள். தங்கள்வரவை என் அன்னையாரிடம் தெரிவிக்கிறேன்.

பீமசேனன்:—நல்லது; அப்படியே செய்.

கடோற்கசன்:—(தாயை அணுகி) அம்மா! கடோற்கசனை நான் வணங்குகிறேன். வெகுகாலமாக நும்மால் ஆகாரத்திற்காக விரும்பப்பட்ட ஒரு மனிதனைக் கொண்டுவந்தேன்.

ஹிடிம்பை:—(அரங்கத்தில் வந்து) குழந்தாய்! வெகுநாள் வாழ்வாயாக. எவ்விதமான மனிதனைக் கொணர்ந்தாய்?

கடோற்கசன்:—பார்வைக்கு மனிதனே; ஆயினும் ஆற்றலினால் அல்லன்.

ஹிடிம்பை:—பிராமணனோ?

கடோற்கசன்:—பார்ப்பனனல்லன்.

ஹிடிம்பை:—(அல்லது) கிழவனோ?

கடோற்கசன்:—கிழவனல்லன்.

ஹிடிம்பை:—குழந்தையா?

கடோற்கசன்:—குழந்தையல்லன்.

ஹிடிம்பை:—அப்படியானால் அவனை நான் பார்க்கிறேன்.

(இருவரும் போதல்.)

ஹிடிம்பை:—இந்தமனிதரைத்தான் கொணர்ந்தாயோ?

கடோற்கசன்:—அம்ம! இவர் யார்?

ஹிடிம்பை:—அறிவுகெட்டவனே! இவர் தெய்வமல்லரா?

கடோற்கசன்:—ஆ! யாருக்குத் தெய்வம்?

ஹிடிம்பை:—உனக்கும் எனக்குந்தான்.

கடோற்கசன்:—என்னகாரணம்?

ஹிடிம்பை:—இதுதான் காரணம்: (பீமசேனனை நோக்கி) *ஆர்யபுத்திரரே! வருக! வருக!

பீமசேனன்:—(உற்றுப்பார்த்து) இவள் யார்? ஓ! தேவி ஹிடிம்பையா?

ஶோகம் ப்ரஷ்டராஜ்யாநாம் ப்ராந்தாநாம் கஹநே வநே ।
ஜாதகாருண்யயா தேவி! ஸந்தாபோ நாஶிதஸ்த்வயா ॥

ஹே தேவியே! ராஜ்யமிழந்து, அடர்ந்த கானகத்தில் சுற்றித்திரிகிறவர்களான எங்களுடைய தாபம், இரக்கங்கொண்ட உன்னால் நாசஞ்செய்யப்பட்டது.

ஹிடிம்பையே! இது என்ன?

ஹிடிம்பை:—(பீமசேனன் காதில்) ஆர்யபுத்திரரே! இங்ஙனமே.

---

* ஆர்யபுத்திரர் என்பது பெண்டிர் கணவனையழைக்க வழங்கும் சொல்.

பீமசேனன்:—இவள் ஜாதியில் அரக்கி; ஆனால் நடக்கையில் அரக்கியல்லள்.

ஹிடிம்பை:—(கடோற்கசனை நோக்கி) வெறிபிடித்தவனே! உன் தகப்பனை வணங்குவாயாக.

கடோற்கசன்:—ஓ! அப்பா! திருதராஷ்டிரர்புதல்வர்களான காட்டுக்குக் காட்டுத்தீ போன்ற கடோற்கசனான நான் வணங்குகிறேன். குழந்தையாகிய எனது அறியாமையை மன்னிக்க வேண்டும்.

பீமசேனன்:—குழந்தாய்! வா. வா. நீசெய்தகாரியம் என் மனத்துக்கு உவந்ததே. (அவனைத் தழுவிக்கொண்டு) திருதராஷ்டிரரின் பிள்ளைகளாகிய கானகத்துக்குக் காட்டுத்தீப்போன்ற பிள்ளைகளைத் தந்தையரின் மனம் விரும்பிக்கொண்டிருக்கிறது; பிள்ளாய்! மிகவும் பலமும் பராக்கிரமமும் பொருந்தியவனாக இருக்கக்கடவாய்.

கடோற்கசன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன்.

பெரியார்:—இந்தக் கடோற்கசன் பீமசேனன்புதல்வனா!

பீமசேனன்:—(கடோற்கசனை நோக்கி) இந்தப்பெரியோரான "கேசவதாசரை" வணங்குவாயாக.

கடோற்கசன்:—பகவானே! வணங்குகிறேன்.

பெரியார்:—தந்தையையொத்த குணமும் கீர்த்தியும் வாய்ந்தவனாக இருப்பாயாக.

கடோற்கசன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன்.

பெரியார்:—ஓ! விருகோதரனே! என் குலத்தைக் காப்பாற்றி, உன்குலத்தையும் மேன்மைப்படுத்தினாய். நாங்கள் போகிறோம்.

பீமசேனன்:—

அநுக்ருஹ்ணாது பவத: ஸர்வலோகாஶீர்ஷம் ஶாஸநம் |

க்ருஷ்ணோஜ்ஜ்வலதாவர்ணாகம் தத்ருவிஶ்வம்ப்ருத்வ்யதாம் ||

இந்த மங்களமெல்லாம் தங்கள் அநுக்கிரகத்தால் உண்டானது. எங்கள் ஆச்சிரமம் சற்றுத்தூரத்தில் இருக்கிறது. அங்கே இளைப்பாறிப் பிறகு போகலாம்.

பெரியார்:—எங்களுக்கு உயிரைக்கொடுத்ததால் போதுமான உபசாரஞ்செய்தாய்விட்டது. நாங்கள் செல்லுகிறோம்.

(மனைவி மக்களுடன் கேசவதாஸர் வெளியேசெல்லுதல்)

பீமசேனன்:—ஹிடிம்பையே! இங்கே வா. குழந்தாய்! கடோற்கச! இங்கே வா. பெரியோரான கேசவதாசரை ஆச்சிரமத்தின் வாயில்வரை வழியனுப்புவோமாக.

𑌯𑌥𑌾 𑌨𑌦𑍀𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌭𑌵𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌃
𑌯𑌥𑌾𑌹𑍁𑌤𑍀𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌭𑌵𑍋 𑌹𑍁𑌤𑌾𑌶𑌃 ।
𑌯𑌥𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌭𑌵𑌂 𑌮𑌨𑍋𑌽𑌪𑌿
𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍍𑌨𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌪𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 ॥

நதிகளுக்குச் சமுத்திரம் எவ்வாறு நாயகனோ, ஹோமத்திரவியங்களுக்கு அக்கினி எவ்வாறு எஜமானனோ, இந்திரியங்களுக்கு மனம் எவ்வாறு தலைமை வகிக்கிறதோ அவ்வாறே பகவான் உபேந்திரர் (விஷ்ணு) நமக்குப் பிரபுவாவர்.

(எல்லோரும் வெளியேறுதல்)

மத்யமவியாயோகம் முற்றிற்று.